Tamil Americans United
Political Action Committee
P.O. Box 33494 | Raleigh | NC 27636 | USA
info@tamilamericansunited.com | (+1) 919-230-4279

## ஒருங்கிணைந்த தமிழ் அமெரிக்கர்கள் அரசியல் நடவடிக்கை குழு

**உடனடி வெளியீட்டுக்காக**
மார்ச் 29, 2024

# இலங்கையின் அரசியல் தீர்வாக ஈழத் தமிழர்களுக்கான சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில் பொதுவாக்கெடுப்பை அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் முன்மொழிவு - அமெரிக்காவின் அணுகு முறையில் திடீர் மாற்றம்

வாஷிங்டன், டிசி, மார்ச் 29, 2024 – இன்று, அமெரிக்க நாடாளுமன்றத்தின் பிரதிநிதிகள் சபை உறுப்பினர்கள் கூட்டாக, சிறீலங்காவுக்கும் ஈழத் தமிழர்களுக்கும் இடையே நீடித்து வரும் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக ஈழத் தமிழர்களுக்கான சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில் பொதுவாக்கெடுப்பு (Referendum) நடத்த அமெரிக்க நிர்வாகத்தை ஆதரவளிக்குமாறு அழைப்பு விடுத்துள்ளது.

மாநிலச் செயலாளர் பிளிங்கெனுக்கு மார்ச் 28, 2024 திகதியிடப்பட்டு எழுதிய கடிதத்தில் கூட்டாக கையொப்பமிட்டுள்ளவர்கள், 170,000 தமிழர்கள் கொல்லப்பட்ட அல்லது காணாமல் போன இனப் போர் முடிவடைந்து 15 ஆண்டுகள் கடந்துவிட்டதை நிர்வாகத்திற்கு நினைவூட்டியுள்ளனர். முரண்பாட்டின் மூல காரணத்தை நிவர்த்தி செய்வதிலும் மீறல்களுக்கு நீதி வழங்குவதிலும் ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்கு இலங்கை ஒத்துழைக்கத் தவறியதை அவர்கள் விமர்சித்துள்ளனர். தமிழர்களின் தாயகத்தை "சுயாட்சியற்ற பிரதேசம்" என்று வர்ணித்துள்ள இக்கடிதம், தமிழர்களின் பாரம்பரியப் பகுதிகளில் இலங்கை தொடர்ந்து மேற்கொண்டு வரும் நில அபகரிப்புகள் தமிழர்களின் தாயகத்தை மேலும் அரிப்பதாகக் குறிப்பிடுகிறது.

முரண்பாட்டைத் தீர்ப்பதற்கான விருப்பமும் திறனும் இலங்கைக்கு இல்லை என்று அந்தக் கடிதம் வலியுறுத்தியுள்ளதுடன், உக்ரைன், கொசோவோ, கிழக்கு திமோர் மற்றும் தெற்கு சூடான் ஆகிய நாடுகளின் மோதல்களை நிரந்தரமாகவும் வெற்றிகரமாகவும் தீர்க்க சுயநிர்ணய அடிப்படையில் தீர்வு காண வழங்கப்பட்ட அதே ஆதரவை ஈழத் தமிழர்களுக்கும் வழங்குமாறு செயலாளர் பிளிங்கனை வலியுறுத்தியுள்ளது. இந்த நாடுகளில் அந்நாடுகளது முரண்பாடுகளை நிரந்தரமாகவும் வெற்றிகரமாகவும் தீர்க்க சுதந்திரத்திற்கான பொதுவாக்கெடுப்புகள் (Independence Referendum) நடத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. சர்வதேச சட்டங்களுக்கமைய ஐ.நா சாசனம் மற்றும் அமெரிக்கக் கோட்பாடுகளின்படி, தமிழர்கள் ஜனநாயக ரீதியில் தங்கள் எதிர்காலத்தைத் தீர்மானிக்க வழிவகுப்பதன் முக்கியத்துவத்தை இந்தக் கடிதம் வலியுறுத்துகிறது. முக்கிய உலகளாவிய கப்பல் பாதையானதும் மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்ததுமான இலங்கைத்தீவு அமைந்துள்ள இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் நிலவும் இம்முரண்பாட்டை தீர்க்க, ஈழத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் உலகளாவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பொதுவாக்கெடுப்பு செயல்முறையை இக்கடிதம் பரிந்துரைத்துள்ளது. மேலும், இனப்படுகொலை குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

கூட்டாக எழுதப்பட்ட இந்தக் கடிதத்தையொட்டி கருத்துத் தெரிவித்த ஒருங்கிணைந்த தமிழ் அமெரிக்கர்கள் அரசியல் நடவடிக்கைக் குழுவின் தலைவர் திருமதி மீனா இளஞ்செயன் பின்வருமாறு குறிப்பிடுகின்றார், "சர்வதேச சட்டங்ளின்பாற்பட்டு ஈழத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்காகக் குரல் கொடுத்த காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு நாங்கள் மனப்பூர்வமாக நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். ஈழத் தமிழர் பிரச்சினையின் உண்மையான மூலத்தை அமெரிக்கா புரிந்து கொண்டு, அவர்களின் தாயகத்தில் அவர்களுக்குரித்தான சுயநிர்ணய உரிமையைப் பயன்படுத்துவதற்கான சட்டப்பூர்வ உரிமைகளை ஆதரிப்பதற்கான இறுதித்தருணம் இதுவே". அவர் மேலும் தெரிவிக்கையில், "ஈற்றில் பல்லாண்டுகளாக தமிழர்கள் எதிர்கொண்டு வரும் பிரச்சினையையும் அதற்காக அவர்கள் தேடிவரும் தீர்வையும் புரிந்து கொண்டுள்ள சில சட்டமன்ற உறுப்பினர்கள் அமெரிக்க காங்கிரசில் உள்ளனர் என்பதை அறிவது ஆறுதலளிக்கிறது. ஒடுக்குமுறைகள் முற்றுப்பெறுவதும் நிரந்தர சமாதானத்தை கட்டியெழுப்புவதும் எதிர்கால மோதல்கள் மற்றும் வன்முறைகளைத் தவிர்ப்பதற்கு அவசியமானது".

ஒருங்கிணைந்த தமிழ் அமெரிக்கர்கள் அரசியல் நடவடிக்கைக் குழுவின் பொதுச் செயலாளர் கலாநிதி சிவா தாமோதரம்பிள்ளை கூறுகையில், "ஈழத் தமிழர்கள், இறையாண்மையை இழந்து சரியாக 405 ஆண்டுகள் ஆகிவிட்டன, அதன் பின்னர் அவர்கள் தமது சுதந்திரத்தை மீளப் பெறவில்லை. ஆங்கிலேயர்கள் தமிழர்களின் இறைமையை 1948இல் சிங்களவர்களிடம் தமிழர்களின் ஆணையின்றி வழங்கியமையானது முறையற்ற மற்றும் முழுமையற்ற காலனியாதிக்க நீக்கத்திற்கு (improper and incomplete decolonization) மட்டுமே வழிவகுத்தது. சிங்கள சிறீலங்காவின் தமிழினப்படுகொலை இதை தமிழர்களின் அவசரமான பிரச்சினையாக ஆக்கியுள்ளது. ஈழத் தமிழர்களின் உரிமையான இறைமை, சுதந்திரத்திற்கான பொதுவாக்கெடுப்பு (Independence Referendum) மூலம் மீண்டும் உறுதிப்படுத்தப்படவும் சட்டப்பூர்வமானதாக ஆக்கப்படவும் இதுவே நேரம்". தமிழர்கள் 1619 இல் போர்த்துகீசியர்களிடம் இழந்த தமது இறைமையை முழுமையாக மீட்டெடுக்க மேலதிக சர்வதேச ஆதரவையும் அவர் கோரினார், மேலும் அவர்களது வரலாற்றுப் பாத்திரத்தின் காரணமாக போர்த்துக்கல் மற்றும் ஐக்கிய இராச்சியம் என்பன இந்த அணுகுமுறைக்கு உதவவும் ஆதரவளிக்கவும் வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

வட கரோலினாவைச் சேர்ந்த மாண்புமிகு டான் டேவிஸ் தலைமையிலான பிரதிநிதிகள் சபையின் பத்து உறுப்பினர்கள் இந்தக் கூட்டுக் கடிதத்தில் கையெழுத்திட்டுள்ளனர்.

###